# எமது நண்பர்கள்

அமர நான்காம் வகுப்பில் கற்கும் மாணவன். அவன் தனது ஓய்வு நேரங்களில் சித்திரம் வரைவான். ஒரு நாள் அவன் ஒரு விசித்திரமான சித்திரம் வரைந்து அதற்கு "எங்கள் நண்பர்கள்" எனப் பெயரிட்டான்.

1. என்னைப் பாதுகாத்து, பராமரித்து அன்புடன் என்னை நடத்தும் நண்பன் நீர் தான் கடவுளே!

2. இரவு பகல் எனப் பாராது உழைத்து நித்திரை விழித்து என்னை நல்ல மனிதனாக்க முயலும் நண்பர் நீர் தான் அப்பா.

3. பத்து மாதம் சுமந்து என்னை இவ்வுலகில் பெற்றெடுத்து அன்புடன் ஆதரிக்கும் நண்பி நீர் தான் அம்மா.

4. பாடங்களை விளக்கி நோய்களின்போது கைகொடுத்து உதவிடும் நல்ல நண்பி நீர் தான் அக்கா.

5. அனைத்து கடமைகளும் செய்து வயோதிபர்களை மதிக்கும் பண்பை வளர்த்திடும் நல்ல நண்பர் நீர் தான் அண்ணா.

6. ஓடியாடி விளையாடிட சிரிக்கவும் - மகிழவும் என்னுடன் இணைந்து கொள்ளும் நண்பா நீர் தான் தம்பி.

7. இன்னிசையுடன் பாடல் பாடி கதைகளால் மகிழ்வித்து எனது சுகநலன்களை பகிர்ந்து கொள்ளும் நண்பி நீர் தான் தங்கை.

நண்பர்களை எனக்கு வழங்கிய கடவுளுக்கு நன்றி துதி செலுத்துவேன்.

நாங்கள் எமது உடலை பார்ப்போம். தலை, கண்கள், கைகள், கால்கள், இதயம் போன்றன சில பிரதான பகுதிகளாகும். இவைகள் இன்றி எமது உடலை இயக்குவது கடினம். சிறுவர்களாகிய நாமும் நல்முறையில் வாழ்வதற்கு நண்பர்கள் பலர் உள்ளனர்.

கடவுள் எப்போதும் எம் தலையைப் போன்று தலைவராக செயற்படுகின்றார். எமது அப்பாவும், அம்மாவும் எம்மைக் கண்களைக் கவனிப்பது போன்று கவனிப்பது எவ்வளவு பெறுமதியுள்ளது. அவர்கள் எமது நண்பர்கள் ஆவர். இதயம் இன்றி எமது உடல் செயற்பட மாட்டாது. அதே போன்று ஆசிரியர்கள் எனப்படும் நண்பர்கள் இன்றி எமது வாழ்வில் முன்னேற்றம் கிடைக்க மாட்டாது. கைகளும், கால்களும் எப்பேர்ப்பட்ட சேவைகளைச் செய்கின்றன? அதேபோன்று எமக்குக் கிடைக்கும் நட்பு எவ்வளவு பெறுமதியானது? நாங்கள் அவர்களின் நட்புறவை மதித்து வாழ்வோம். நண்பர்களைத் தந்த கடவுளுக்கு துதி செலுத்துவோம்.

## செயற்பாடு

1. இப் பாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நண்பர்களுள் சிலரை சித்திரம் வரைந்து காட்டுக.

2. உமது பாடசாலையில் நண்பர்களுக்கு உதவி செய்த சந்தர்ப்பங்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.